2014 ஜூலை 15]

பணியையும் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்து, பேருந்துகள் சாலையில் நிற்பதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, மகாகவி பாரதி நகர் பணிமனைக்கு 1.37 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.80 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. M. Shed மற்றும் நிருவாகக் கட்டடம் கட்டும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. விரைவாக அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் அந்தப் பணிமனை திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

142—

நடமாடும் கால்நடை மருந்தகம்

***5741—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு சட்டமன்றத் தொகுதியிலே ஒரு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவைத் தொடங்க

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதியிலே ஏற்கெனவே ஒரு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு இயங்கி வருகிறது. மேலும் 6 கால்நடை மருந்தகங்கள் அந்தத் தொகுதியிலே இருக்கின்ற காரணத்தினால், மேலும் அங்கே ஒரு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு தொடங்குவதற்கான அவசியம் எழவில்லை. தற்போது அளித்துவரும் சிகிச்சைகளே போதுமானவை என துறை கருதுகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமர்ந்திருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன். தீமைகளை வழியனுப்பவும், நன்மைகளை வரவேற்கவும் 2014 ஆம் ஆண்டில் வந்தது நாடாளுமன்றத் தேர்தல். 37 நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றி. இது மாண்புமிகு அம்மா அவர்களின் இன்றைய வீர வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) 234 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றி. இது மாண்புமிகு அம்மா அவர்கள் நாளை எழுதப்போகும் சரித்திரம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் 3 ஆண்டுகால பொற்கால ஆட்சியில் தமிழக மக்கள் தன்னிறைவு பெற்று ஏற்றம் கண்டுள்ளனர்.

முற்பகல் 10-40

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் தந்து, எங்கள் தெய்வத் தாயின் கருணையில் மனிதர்கள் நல்வாழ்வு காணும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், கால்நடைகளைக் காத்திடவும், பராமரிக்கவும் தமிழகம் முழுவதும், கிராமங்கள்தோறும் முகாம்கள் நடத்திச் சென்று, சென்ற ஆண்டு மட்டும் விலையில்லா 24,000 கறவை மாடுகளும், கறவைப் பசுக்களும், 10 இலட்சம் வெள்ளாடுகளும், செம்மறி ஆடுகளும் வழங்கி, ஏழை மக்களின் எண்ணங்களில் குடி கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சி மகத்தான வெற்றி கண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தன்னந்தனியாக நின்று, தமிழக

2014 ஜூலை 15]

மக்களுக்குத் துரோகம் செய்த எதிரிகளை ஓடவிட்டு வரலாறு காணாத அளவுக்கு வெற்றி பெற்று, சாதனைச் சின்னமாகத் திகழும் எங்கள் தங்கமான தலைவியின் தன்னிகரில்லா ஆட்சியில் தமிழகம் நிமிர்ந்து நிற்கிறது.

எங்களுடைய ஆற்காடு சட்டமன்றத் தொகுதி சுமார் 102 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. இதில் 3 ஒன்றியங்கள், 3 பேரூராட்சிகள் மற்றும் ஒரு நகராட்சி உள்ளன. இங்கு பெருமளவு விவசாயப் பெருமக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் கால்நடைகளை வைத்து பிழைப்பு நடத்தி வருகின்றார்கள். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், ஏழை, எளிய மக்கள் விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் பெற்று பயனடைந்து வருகின்றார்கள். தற்போது இவற்றின் வளர்ச்சி இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இதனால் ஆற்காடு சட்டமன்றத் தொகுதிக்கு நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அன்பு, அறிவு, துணிவு என இம்மூன்றும் தன்னகத்தே கொண்ட நம்முடைய தானைத் தலைவி, தன்னிகரில்லா தலைவி, எங்களுடைய பாசமிகு தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, எங்களுடைய ஆற்காடு சட்டமன்றத் தொகுதியின் சார்பில் கோடானுகோடி நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து, நன்றி சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.